உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.07.2026 • மலர் 04 • இதழ்: 208 • திங்கள் • Edition : Nagercoil • 27.07.2026 • Vol : 04 • Issue : 208 • Page : 4 • Rs. 5/-

# ‘பாதுகாப்பு தளவாட ஏற்றுமதியில் புதிய உச்சம்

## ‘மனதின் குரலில்’ பிரதமர் பெருமிதம்



புதுடெல்லி: பாதுகாப்புதளவாடங்கள்உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியா புதிய உயரத்தை எட்டியுள்ளதாக ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு, ‘மனதின் குரல்’ (மன் கீ பாத்) என்ற தலைப்பில் மாதம்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் நாட்டு மக்களிடம் வானொலியில் உரையாற்றி வருகிறார். அதன்படி, 136வது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி இன்று நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

மக்களே, இந்த மாதம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் விஞ்ஞானிகள்,தொலைதூரம் செல்லக்கூடிய பினாகா ராக்கெட் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டனர். இந்த வெற்றி நமது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி.

அதேபோல குஷா என்ற பெயரில் அதிநவீன ஏவுகணை க வசத்தையும் டிஆர்டிஓ உருவாக்கியது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மகேந்திரகிரி போர்க்கப்பல் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. தற்சார்பு இந்தியாவை நோக்கிய பயணத்துக்கு வலு சேர்க்கும் வகையில் இது அமைந்துள்ளது.

இன்று பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி, நட்பு நாடுகள் உடனான அரசியல் ரீதியான உறவு உள்ளிட்டவை புதிய உயரத்தை தேசம் எட்டியுள்ளன.

இந்த மாத தொடக்கத்தில் நான் இந்தோனேசியா பயணம் மேற்கொண்டிருந்தேன். அப்போது பிரம்மோஸ் ஏவுகணை சார்ந்த முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய பாதுகாப்பு உபகரணம் மற்றும் தொழில்நுட்பத்தின் மீது உலக நாடுகள் கொண்டுள்ளநம்பிக்கை அதிகரித்து வருவதை இது காட்டுகிறது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

## மத்திய கல்வி அமைச்சராக பிரஹலாத் ஜோஷி பொறுப்பேற்பு

புதுடெல்லி: நாட்டின் புதிய கல்வி அமைச்சராக பிரஹலாத்ஜோஷி(ஜூலை 26) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து, மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான், நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டதை அடுத்து, புதிய கல்வி அமைச்சராக மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷிக்கு கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, பிரஹலாத் ஜோஷி தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, கல்வி அமைச்சக்தின் மூத்த அதிகாரிகளுடன் அவர் தனது முதல் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரஹலாத் ஜோஷி, “பிரதமர் என் மீது முழு நம்பிக்கை வைத்து இந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார். நேற்று நான் கர்நாடகாவில் இருந்தேன். இரவே டெல்லி வந்து சேர்ந்தேன். இன்றுகாலைநான்பொறுப்பேற்றுக்கொண்டேன்.



இது எனக்கு புதியதுறை. இந்த துறையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் தொடர்பாக ஆய்வு செய்து வருகிறேன். தகவல்களைச் சேகரித்து ஒட்டுமொத்த அமைச்சகத்தின் செயல்பாட்ட புரிந்து கொள்ள முயன்று வருகிறேன். இன்று நாங்கள் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தினோம். தொடர் ஆலோசனைகளைக் கூட்டங்களை நடத்தினேன். இது மிகப் பெரிய துறை என்பதால், இதை முழுமையாக புரிந்து கொண்ட பிறகு உங்களிடம் விரிவாகப் பேசுவேன்.” என தெரிவித்தார். கர்நாடகாவின் தார்வார் மக்களவைத் தொகுதியில் இருந்து ஆறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவரான 63 வயதாகும் பிரஹலாத் ஜோஷி, ஏற்கனவே நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளின் அமைச்சராக இருந்து வருகிறார்.

## ‘மதுரை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 7 டிகிரி வெப்பநிலை உயரும்’

சென்னை: தமிழகத்தில் மதுரை, வேலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை நாளை 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்எனவானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ் மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் (ஜூலை 27) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். ஜூலை 28 முதல் 31ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் மலைப் பகுதிகள், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். ஆக.1ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் ஜூலை 30ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வேலூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும்திருநெல்வேலிமாவட்டங்களில் ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை மாவட்டம் கருங்காலக்குடியில் 2 செமீ, நீலகிரி மாவட்டம் பந்தலூர், சிவகங்கை மாவட்டம்சிங்கம்புணரியில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



## நாகர்கோவிலில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு அமைச்சர் நியமன ஆணை வழங்கினார்

நாகர்கோவில், ஜூலை. 27

கன்னியாகுமரி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகர்கோவில் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக, நகர்புர வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) இணைந்து நடத்தியதனியார்வேலை வாய்ப்பு முகாம் நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில்சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் செ.ராஜேஷ் குமார் உடனடி நியமன ஆணை வழங்கி கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்ப ட்டு வருவதுடன், தனியார் துறையிலும் தகுதியான இளைஞர்களுக்குப் வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் இது போன்ற மாவட்ட அளவிலான முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இம்முகாமில் 2112 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டனர். கலந்து கொண்டவர்களில் 482 வேலைநாடுநர்கள் பணி நியமனம் பெற்றனர். 316 வேலைநாடுநர்கள் முதற்கட்ட நேர்காணலில் தேர்வு செய்யப்பட்டனர். பணியாணை பெற்ற மாணவர்களை வாழ்த்துகிறேன். என கூறினார்.

அதனைத்தொடர்ந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில், உடல் பருமன் மற்றும் அயோடின் குறைபாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நடைபெற்ற முகாமில் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) டாக்டர்.கா.சண்முகசுந்தர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆ.பொ.ஆறுமுக வெங்கடேஷ், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம்சா.பத்ஹீ முகமது நசீர், பயோனியர் குமாரசுவாமி கல்லூரியின் தலைவர் மற்றும் செயலாளர் பி.குமாரசுவாமி, கல்லூரி பேராசிரியர்கள், நிறுவன பிரதிநிதிகள், பெற்றோர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## 150 அடி ஆழ கிணற்றில் தள்ளி 2 பள்ளி சிறுவர்கள் கொலை; இளைஞர் கைது.!

தேனி, ஜூலை:27

புறா பிடித்து தருவதாக ஆசை வார்த்தை கூறி, சகோதரர்களான 2 பள்ளி மாணவர்களை இளைஞர் ஒருவர் 150 அடி ஆழ கிணற்றில் தள்ளி படுகொலை செய்த சம்பவம் தேனியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருகே உள்ள ரங்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் சின்னத்தம்பி. இவரது மகன்கள் ஸ்ரீஹரிஷ்(11), சபரீஷ்(10).

இவர்கள் அங்குள்ள பள்ளியில் முறையே 6 மற்றும் 5ம் வகுப்பு படித்துவந்தனர்.சகோதரர்களானஇவர்களுக்குபுறாவளர்ப்பதில் சமீபகாலமாக அதிக ஆர்வம் இருந்ததாக தெரிகிறது.

இதனிடையே, கடந்த வெள்ளிக்கிழமை மாலை பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்த சிறுவர்கள் இருவரும், மாலை 5 மணியளவில் வெளியில் விளையாட சென்றுள்ளனர்.

ஆனால், இரவு நேரமாகியும் அவர்கள் வீடு திரும்பவில்லை. இதனால் சந்தேகமடைந்த அவர்களின் பெற்றோர், இருவரையும் பல இடங்களில் தேடி பார்த்தனர். ஆனால் அவர்கள் கிடைக்கவில்லை. இதனால் பயந்துபோன பெற்றோர், போடிநாயக்கனூர் ஊரகக் காவல் நிலையத்தில் தகவல் அளித்தனர்.

இதன்பேரில், போலீசாரும் சுற்றுப்பகுதிகளில் சிறுவர்களை தேடி வந்தனர். அப்போது, கரட்டுப்பட்டி பகுதியில் உள்ள தனியார் தோட்டத்து கிணற்றில் 2 சிறுவர்களின் உடல்கள் மிதப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தீயணைப்புத் துறையினருடன் அங்கு சென்ற போலீசார், கிணற்றில் இருந்த சிறுவர்களின் உடல்களை மீட்டனர்.

விசாரணையில், அவை மாயமான ஸ்ரீஹரிஷ், சபரீஷ் ஆகியோரின் உடல்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவர்களின் உடல்களை பிரேதப் பரிசோதனைக்காக போலீசார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் மேற்கொண்ட விசாரணையில், சிறுவர்கள் வசிக்கும் அதே தெருவைச் சேர்ந்த கேசவ் பாலாஜி(19) என்ற இளைஞருடன் அவர்கள் கடைசியாக சென்றது தெரியவந்தது.

பின்னர் கேசவ் பாலாஜியை போலீசார் தேடி சென்றபோது, அவர்தலைமறைவானதுதெரியவந்தது.தொடர்ந்துநடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில், போடி அருகே பதுங்கி இருந்த கேசவ் பாலாஜியை போலீசார் மடக்கி பிடித்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகின. அதாவது, சிறுவர்களுக்கு புறாக்கள் மீது தீரா ஆசை இருந்ததை தெரிந்து கொண்ட கேசவ் பாலாஜி, அவர்கள் இருவரையும் வெள்ளிக்கிழமை மாலை அழைத்து பேசியுள்ளார்.

அப்போது, சில உயர்ரக ஜாதி புறாக்கள் ஊருக்கு வெளியே உள்ள கிணற்றுக்குள் இருப்பதாக கூறிய அவர், சிறுவர்களை அங்கு அழைத்து சென்றதாக தெரிகிறது. பின்னர், கிணற்றுக்குள் புறா இருக்கிறதா என பார்க்குமாறு அவர் கூறியதை நம்பி, சிறுவர்கள் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துள்ளனர்.

அப்போது அவர்கள் இருவரையும் கிணற்றுக்குள் தள்ளி கொலை செய்ததாக போலீசாரிடம் கேசவ் பாலாஜி வாக்குமூலம் அளித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, கேசவ் பாலாஜியை கைது செய்த போலீசார் அவரிடம் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். எதற்காக அவர் சிறுவர்களை கொலை செய்தார்? சிறுவர்களின் பெற்றோருக்கும், கேசவ் பாலாஜிக்கும் ஏதேனும் முன்விரோதம் இருந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்ற கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கன்னியாகுமரி அருகே

## நான்குவழி சாலை பாலத்தால் விவசாயம் பாதிப்பு; தண்ணீர் வெளியேற்றுவதை தடுத்து நிறுத்திய அதிகாரிகள்

நாகர்கோவில், ஜூலை. 27

கன்னியாகுமரி அருகே 'பண்ணிக்குண்டு குளத்தில்' குறுக்கே கட்டப்பட்டுள்ள 'நான்கு வழிசாலை பாலம்' தாழ்வாக கட்டியதால் குளத்திற்குள் தேங்கும் தண்ணீரிலிருந்து பாலத்தை காப்பாற்றும் நோக்கத்தில் குளத்திலிருந்து மோட்டார் வைத்து தண்ணீரை வெளியேற்றி வருகின்றனர்.

தகவல் அறிந்த குமரி மாவட்ட நீர்பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ,மீன்வளத்துறை முன்னாள் தலைவர் சகாயம், என்.பி சேனல் தலைவர் தாணுபிள்ளை, பி.பி சேனல் தலைவர் முருகேசபிள்ளை உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு சென்று அப்பகுதியினை ஆய்வு செய்தனர்.

அதன் தொடர்ச்சியாக, நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, உதவி செயற்பொறியாளர் வல்சன்போஸ், உதவி பொறியாளர் பிரேமலதா ஆகியோர் உத்தரவின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த நீர்வளத்துறை பணியாளர்கள் வெற்றி, எட்வர்ட் ஆகியோர் குளத்திலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் வெளியேற்றுவதை தடுத்து நிறுத்தினர்.



இதைத்தொடர்ந்து அங்கு வந்த நாற்கர சாலை அதிகாரிகள்' மற்றும் பணியினை மேற்கொள்ளும் அலுவலர்கள் ஆகியோரிடம் பாசனத்துறை நிர்வாகிகள் குளத்தின் கரையானது நாற்கர சாலை பணிகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதே போன்று மீண்டும் கரையை உருவாக்கவும், ஏற்கனவே இருந்த குளத்தின் கரையை முழுமையாக அகற்றி, அதற்கு பதிலாக அருகிலிருந்த தாழ்வான பாறை பள்ளம்த்தில் உருவாக்கப் பட்ட புதிய கரை காரணமாக குளத்தின் தண்ணீர் மட்டம் தாழ்வாக அமைந்துள்ளதுடன் தண்ணீர் கொள்ளளவு குறைந்து விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என்று விவசாயிகள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. அப்போது குளத்தில் உயரமாக தேங்கியுள்ள தண்ணீர் காரணமாக பாலத்தின் தூண்களுக்கு சேதம் ஏற்படும் என்று தேசிய நெடுஞ்சாலை அதிகாரிகள் தரப்பிலும் தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து இரண்டு துறை அதிகாரிகளும், பாசனத்துறை நிர்வாகிகளும், விவசாயிகளும் கலந்து பேசி, ஏற்கனவே இருந்த இடத்தில் அதே உயரத்தில் குளத்திற்கு உடனடியாக மீண்டும் 'புதிய கரை' அமைப்பது எனவும், அதற்கு வசதியாக சிறிதளவு தண்ணீரை விவசாயத்திற்கு பாதிப்பு இல்லாமல் வெளியேற்றுவது சம்பந்தமாகவும், குளத்தின் வடமேற்கு பகுதியிலுள்ள மடை மற்றும் வயல்களுக்கு உழவு இயந்திரம் போன்றவை செல்வதற்காக ஏற்கனவே குளத்தின் கரையில் இருந்த சாலையை அடைக்காமல் இருப்பதற்கு கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.




# மத்திய அரசின் நீட் தேர்வு முறைகேடுகளை கண்டித்து நடைபெற்ற மெழுகுவர்த்தி பேரணி!!!

திருப்பூர், ஜூலை 27 வினாத்தாள் கசிவு பிரச்னைக்கு விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது மட்டுமே முழுத் தீர்வாகாது இந்தியாவில் பல்வேறு குற்ற வழக்குகளை விசாரிக்க 775 விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன சட்ட அமைச்சகத்தின் தகவலின்படி விரைவு நீதிமன்றங்களில் 2.45 லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன விரைவு நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள், பணியாளர்கள், அரசு வழக்கறிஞர்கள், கூடுதல் நிதி வளங்கள் தேவை

போதிய நீதிபதிகள் இல்லாதது, பல பணியிடங்கள் காலியாக இருப்பதில் இதில் உள்ள முக்கிய சவால்

அனைத்து பிற வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே விரைவு நீதிமன்றங்களால் பலன் கிடைக்கும், என முன்னாள் சேர்மன் காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவர் கிருஷ்ணன் தெரிவித்தார்.

பேரணியில் துணைத் தலைவர் கதிரேசன், கேபிஜி செந்தில்குமார், 48வது மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி கோபால்சாமி, ராமகிருஷ்ணன், கோவிந்தசாமி, முகமது ஹசன், மகிலா காங்கிரஸ் தலைவி ஆஷா, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகளுக்கும் சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டிய தலைவர் நல்லூர் P. கோபால்சாமி நன்றியினை தெரிவித்தார்.

# ஈரோடு ஆர்.கே.வி. ரோட்டில் புதிய ரவுண்டானா திறப்பு



ஈரோடு ஜூலை 27 ஈரோடு ஆர்.கே.வி. சாலையில் பல ஆண்டுகளாக இயங்கி வரும் தி சென்னை சில்க்ஸ் மற்றும் ஸ்ரீ குமரன் தங்க மாளிகை சார்பில் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு " பகுதியாக, ஆர்.கே.வி. சாலையை மெருகூட்டும் வகையிலும் போக்குவரத்து சீரமைப்பிற்காகவும் ஸ்ரீ குமரன் தங்கமாளிகை எதிரே புதிய ரவுண்டானா அமைக்கப்பட்டது.

திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கண்ணபிரான் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்ட ஈரோடு மாவட்ட காவல் துறை குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தங்கவேல் மற்றும் ஈரோடு நகர காவல் நிலைய ஆய்வாளர் இளங்கோ ஆகியோர் ரிப்பன் வெட்டி புதிய ரவுண்டானாவை பொது மக்கள் பயன்பாட்டிற்காக முறைப்படி திறந்து வைத்தனர். புதிதாக அமைக்கப்பட்டுள்ள

இந்த அழகிய ரவுண்டானாவால் அப்பகுதியே புதுப் பொலிவுடன் மிளிர்கிறது என்றும், போக்குவரத்து நெரிசல் குறைந்து பயனுள்ளதாக இருக்கும் என்றும் பொது மக்கள் மற்றும் அப்பகுதி வணிகர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# டாஃபே மோட்டார்ஸ்டியூட்ஸ் புதிய என்ஜின் உற்பத்தி மையம் ஆல்வாரில் தொடக்கம்




சென்னை, ஜூலை 27, டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்யூப்மென்ட் நிறுவனம் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமான டாஃபே மோட்டார்ஸ் அண்ட் டிராக்டர்ஸ் நிறுவனம் புதிய ட்யூட்ஸ் என்ஜின் உற்பத்தி மையத்தை ராஜஸ்தான் ஆல்வாரில் அம்மாநில அமைச்சர் கர்னல் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் திறந்து வைத்தார்.

உடன் டாஃபேவின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான மல்லிகா சீனிவாசன், துணைத்தலைவர் மல்லிகா வேணு, சி.இ.ஓ சந்தீப் சின்ஹா, டியூட்ஸின் சி.இ.ஓ செபாஸ்டியன் ஷ ¬ல் டே ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், கூட்டத்தில் உரையாற்றிய போது, மாநிலத்தில் டாஃபேன் முதலீட்டைப் பாராட்டிய அவர் " தற்சார்பு இந்தியாவின் தேசிய குறிக்கோள்களுக்கு பங்களிக்கும் அதே நேரத்தில் உலகத்திற்காக ராஜஸ்தானில் தயாரிக்கப்பட்டது' என்ற தொலை நோக்குப் பார்வை பாராட்டதக்கது.

மேலும் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் சிறப்பான உற்பத்தி மூலம் இந்தியாவின் விவசாயிகளுக்கு புதுமை, திறன் வளர்ப்பதில் டாஃபேயின் பணியாளர்கள், சப்ளை செயின் பார்ட்னர்கள் மற்றும் அடுத்த தலைமுறை தலைமையின் உறுதிப்பாட்டை நான் பாராட்டுகிறேன் என்றார்.

மேலும் மல்லிகா சீனிவாசன் தெரிவித்ததாவது: " டாஃபே மற்றும் அமால்கமேஷன்ஸ் குழுமம் ஆகியவை ஒன்றிணைந்து இந்தியாவின் மிகப்பெரிய என்ஜின் உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாகும். உற்பத்தி திறன் 2030 க்குள் ஆண்டு தோறும் 4,00,000 முதல் 5,50,000 என்ஜின்களாக விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'ஐரோப்பாவின் முன்னணி என்ஜின் உற்பத்தியாளர்களில் ஒருவரும், டீசல் என்ஜின் தொழில்நுட்பத்தில் முன்னோடியுமான ட்யூட்ஸ் உடனான எங்கள் பார்ட்னர்ஷிப் ஜெர்மன் பொறியியலின் துல்லியத்தையும் இந்தியாவின் உற்பத்தி திறன்களின் வலிமையையும் ஒன்றிணைக்கிறது என்றார்.

# கொங்கு இயற்கை மருத்துவக் கல்லூரியில் பிரிவு உபசார விழா



ஈரோடு ஜூலை 27 பெருந்துறையில் உள்ள கொங்கு இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியில் சர்வதேச வேலைவாய்ப்புகளை நோக்கமாகக் கொண்டு சந்திராஸ்கூல் ஆப் யோகா வர்க்கலா கேரளா உடன் இணைந்து கடந்த இரண்டு வாரங்களாக திறன் மேம்பாடு சான்றிதழ் பயிற்சிகள் வழங்கப்பட்டன அதனைத்தொடர்ந்து யோகா அலையன்ஸ் சான்றிதழ் வழங்கும் விழாவும், இறுதியாண்டு மாணவர்களுக்கான பிரிவு உபசாரவிழாவும் இரண்டு நாட்களாக சிறப்பாக நடைபெற்றன. முதல் நாளில் நடைபெற்ற யோகா அலையன்ஸ் சான்றிதழ் வழங்கும் விழாவில் மாணவர்களின் திறன்களை மேம்படுத்தி, சர்வதேச சர்வதேச அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் அதற்குரிய பயிற்சிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதையடுத்து இறுதியாண்டு மாணவர்களுக்கான பிரிவு உபசார விழாவில் கல்லூரி முதல்வர் டாக்டர் பிரதாப் சிங் வரவேற்றார்.

கே.வி.ஐடி அறக்கட்டளை துணைத் தலைவர் வெங்கடாசலம்தலைமை தாங்கினார்.

கொங்கு சுல்வி நிறுவனங்களின் தாளாளர் கார்த்திகேயன் டாக்டர் விஜயராகவன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட டாக்டர் ராகவேந்திரசாமி தாளாளர்கள் கார்த்திகேயன் கிருஷ்ணன், சச்சிதானந்தன் அறக்கட்டளை உறுப்பினர் ஸ்ரீதர் ஆகியோர் மாணவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினர் முடிவில் டாக்டர் ராஜரத்தினம் நன்றி கூறினார் .

# திற்பரப்பு அருகே கழிவுகள் ஏற்றி வந்த வாகனத்தை துரத்திப் பிடித்த வாலிபர்கள்
## ஓட்டுநர் தப்பி ஓட்டம்



மார்த்தாண்டம், ஜூலை.27 குமரி மாவட்டத்தில் இயங்கும் பன்றி பண்ணைகளுக்கு துர் நாற்றம் வீசும் அழுகிய நிலையில் உள்ள கோழி கழிவுகள் அதுபோல உணவக கழிவுகள் வாகனங்களில் கொண்டு செல்வது வழக்கமாக உள்ளது . துர்நாற்றத்துடன் சொல்லும் இந்த வாகனங்களை அவ்வப்போது பொது மக்கள் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தாலும் இந்தசம்பவம்தொடர்ந்து அரங்கேறி வருகிறது .

அந்த வகையில் நபிணந்தோடு பகுதியில் செயல்பட்டு வரும் பன்றி பண்ணைக்கு உணவக கழிவுகள் கோழிக்கழிவுகள் என துர்நாற்றத்துடன் வந்த வாகனத்தை நேற்று முன்தினம் இரவு அந்தப் பகுதி இளைஞர்கள் திற்பரப்பு பகுதியில் வைத்து துரத்தி பிடித்தனர். அப்போது வாகனத்தின் ஓட்டுனரும் வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பி ஓடியுள்ளார்.

தொடர்ந்து பொது மக்கள் அளித்த தகவலின் பெயரில் குலசேகரம் போலீசாரும், திற்பரப்பு பேரூராட்சி அலுவலர்களும் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு வாகனத்தில் இருந்த கோழி கழிவுகளை அகற்றி கழிவுகளை ஏற்றி வந்த மினி டெம்போவை குலசேகரம் போலீசாரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து போலீசாரும் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர் .இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது .

# புதுக்கடை அருகே முன்விரோத்தில் மாறி மாறி வெட்டு ; 3 பேர் படுகாயம்

புதுக்கடை, ஜூலை. 26 புதுக்கடை அருகே உள்ள முஞ்சிறை பகுதியை சேர்ந்தவர் எட்வின் கிளாடிஸ் (40) இவரது பெரியம்மா சரஸ்வதி என்பவரது வீட்டில் வாடகைக்கு அதே பகுதியை பகுதியைச் சேர்ந்த தினேஷ் (41) என்பவர் வாடகைக்கு வசித்து வருகிறார். இவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்புதான்வசித்து வந்த வீட்டின் கண்ணாடிகளை உடைத்து தகராறு செய்துள்ளார் .

இந்த நிலையில் நேற்று முன்தினம் தினேஷ் மற்றும் அவரது நண்பர் ரமேஷ் (44) ஆகியோர் வேப்பமூடு முத்தாரம்மன் கோவில் அருகில் இருந்தனர். அப்போது அங்கு வந்த எட்வின் கிளாடிஸ் தனது பெரியம்மா வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை சேதப்படுத்தியது தொடர்பாக தினேஷிடம் கேட்டுள்ளார். அப்போது ஆத்திரம் அடைந்த தினேஷ் மற்றும் ரமேஷ் ஆகியோர் சேர்ந்து வெட்டு கத்தியால் எட்வின் கிளாடிசை வெட்டி உள்ளனர். மேலும் கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிய வருகிறது. உடனடியாக அக்கம்பக்கத்தினர் எட்வின் கிளாடிசை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். இதுவரைக்கு புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இது போன்று தினேஷ் புதுக்கடை போலீசில் அளித்துள்ள புகாரில் முன் விரோதம் காரணமாக தன்னையும், தனது நண்பர் ரமேஷ் என்பவரையும் எட்வின் கிளாடிஸ் தாக்கி, வெட்டு கத்தியால் வெட்டியதில் படுகாயம் அடைந்து, குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் புகார் அளித்துள்ளார். இந்த சம்பவம் குறித்து இருதரப்பினரும் அளித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஊத்தங்கரை அருகே குடிநீர் வேண்டி தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டம்




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கதவனி கிராமத்தில் சுமார் 250 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன இந்த கிராமப் பகுதியில் மின் மோட்டார் பழுதால் கடந்த 10 நாட்களுக்கு மேலாக சரிவர குடிநீர்வழங்காத அவலநிலை காணப்பட்டு வந்துள்ளது தண்ணீர் பற்றாக்குறையால் கிராம மக்கள் உரிய நேரத்தில் வேலைக்கு செல்ல முடியாமலும், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்வோர் சரியான நேரத்திற்கு செல்ல முடியாத சூழலில் மிகுந்த மன வருத்தம் அடைந்துள்ளன இது தொடர்பாக பொது மக்கள் பலமுறை பஞ்சாயத்து கிளர்க்கிடம் கூறியும் எந்த நடவடிக்கும் இல்லை

இது சம்பந்தமாக உரிய அதிகாரியிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் இல்லை . என்று அறிந்த பொதுமக்கள் சுமார் 50க்கும் மேற்பட்ட பெண்கள்காலி குடங்களுடன் திருப்பத்தூர் ஊத்தங்கரை தேசிய நெடும் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த ஊத்தங்கரை காவல் ஆய்வாளர். செல்வராஜ். மற்றும் துணை ஆய்வாளர் ராஜாசங்கிலி கருப்பன். எஸ்.பி. சி ஐ.டி.அதியமான் மற்றும் ssi கிருஷ்ணன். ஜோனல் டெப்டி.பி டி ஓ. லோகாம்பிகை. விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடையே சமாதான பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு குடிநீர் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்வதாக கூறியதை அடுத்து அனைவரும் கலந்து சென்றனர் இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா ஸ்ரீ வடக்கு செல்லியம்மன் கோவில் 50 ஆம் ஆண்டு பூச்செரிதல் விழாவை முன்னிட்டு அருள்மிகு ஸ்ரீ வடக்கு வாசல் செல்வி அம்மன் கோவிலில் காலை 9 மணி அளவில் செல்லி அம்மனுக்கு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெறுகிறது அதனைத் தொடர்ந்து காலை 10 மணி அளவில் மாபெரும் பொது அன்னதானம் நடைபெறுகிறது ஊர் மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.




## பெருந்துறையில்
# 'போதையில்லா தமிழகம்' விழிப்புணர்வு பேரணி

ஈரோடு ஜூலை 27 ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் 'வி தி லீடர்ஸ்' (We The Leaders) அமைப்பின் சார்பில் 'போதையில்லா தமிழகம்' என்ற லட்சியத்தை வலியுறுத்தி மாபெரும் விழிப்புணர்வு பேரணி மற்றும் 'ஒயிட் பேண்ட்' விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி ராயல் K.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

இப்போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியானது பெருந்துறை புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கி ராஜவீதி, மஜித் வீதி, குன்னத்தூர் ரோடு, அண்ணா சிலை, அரசு மருத்துவமனை ரவுண்டானா வழியாக பழைய பேருந்து நிலையத்தை வந்தடைந்தது. இந்நிகழ்ச்சியில் 'வி தி லீடர்ஸ்' அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள், ஏராளமான கல்லூரி மாணவர்கள்,

இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என 300க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

ஜூலை மாதம் முழுவதும் கடைப்பிடிக்கப்படும் இந்த 'ஒயிட் பேண்ட்' முன்னெடுப்பின் மூலம், பங்கேற்ற அனைவரும் கைகளில் வெள்ளை பட்டை அணிந்து, இனி ஒருபோதும் போதைப் பொருளை பயன்படுத்த மாட்டோம் என்றும், குடும்பத்தையும் சமூகத்தையும் போதையின் பிடியில் இருந்து பாதுகாப்போம் என்றும் உறுதியேற்றுக் கொண்டனர்.

மேலும் சாமானிய மக்களின் நல்வாழ்விற்கும் ஆரோக்கியமான சமுதாய உருவாக்கத்திற்கும் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என இந்நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

## தருமபுரியில் மை பாரத் கேந்திரா தருமபுரி சார்பில்
# மாவட்ட அளவிலான போதை பழக்கத்திற்கு எதிரான போட்டிகள்

தருமபுரி ஜூலை 27 தருமபுரியில் இந்திய அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், மை பாரத் கேந்திரா, தருமபுரி சார்பில் மாவட்ட அளவிலான "Nasha Mukt Yuva for Viksit Bharat" நிகழ்ச்சி "Drug Free India" என்ற கருப்பொருளில் நடத்தப்பட உள்ளது . இந்நிகழ்ச்சியில் பின்வரும் 8 போட்டிகள் நடத்தப்படுகின்றன :

1. நாட்டுப்புறப் பாடல் குழுப் போட்டி (5 – 10 நபர்கள்)
2. நடனக் குழுப் போட்டி (5 – 10 நபர்கள்),
3. நாடகப் போட்டி
4. ஓவியப் போட்டி (தனிநபர்)
5. விவாதம் / பேச்சுப் போட்டி
6. குறும்படம் / ரீல்ஸ் போட்டி
7. முழக்கம் (Slogan) எழுதும் போட்டி
8. கவிதை பேசும் (Slam Poetry) போட்டி

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் MY Bharat இணையதளம்




அல்லது Google Form மூலம் பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான இணையதள இணைப்பும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நிகழ்ச்சி நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நிகழ்ச்சியின் விவரங்கள் பின்வருமாறு: நிகழ்ச்சி நடைபெறும் தேதி : 28.07.2026 (செவ்வாய்க்கிழமை), நேரம் : காலை 9.00 மணி, இடம் : சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி, மாட்லாம்பட்டி, தருமபுரி. ஏற்கனவே இணையத்தில் பதிவு செய்துள்ள அனைத்து போட்டியாளர்களும் காலை 9.00 மணிக்குள் தவறாமல் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது . வரும் போது கீழ்க்கண்ட ஆவணங்களை கட்டாயம் கொண்டு வர வேண்டும் . ஆதார் அட்டையின் நகல், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத, ஆனால் தருமபுரி மாவட்டத்தில் உள்ள பள்ளி அல்லது கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் தாங்கள் பயிலும் பள்ளி / கல்லூரியின் அடையாள அட்டையின் நகலையும் கட்டாயம் கொண்டு வர வேண்டும். அனைத்து போட்டியாளர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக வருகை தந்து பதிவு மற்றும் சரிபார்ப்பு பணிகளைநிறைவுசெய்து ஒத்துழைக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு 8428455241 / 7806959971 மாவட்ட இளைஞர் அலுவலர் மை பாரத் கேந்திரா தருமபுரி.

## சாமிதோப்பில்

# மன்னர் வெங்கலராஜன் 502 வது ஜெயந்தி விழா



தென்தாமரைகுளம், ஜூலை. 27

சாமிதோப்பு அன்புவனத்தில் மன்னர் வெங்கலராஜன் 502 வது ஜெயந்தி விழா மற்றும் குமரி நாட்டுச் சோழ மன்னன் வெங்கலராஜன் வரலாற்று ஆய்வு புத்தக நூல் வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ் விழாவுக்கு, சாமிதோப்பு மகாகுரு. பாலபிரஜாபதி அடிகளார், என். தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமை வகித்தனர். வெங்கலராஜன் அறக்கட்டளைதலைவர் எம்.நீலம் மதுமயன் மற்றும் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகிலன்விளை ஆர். ஜோதீஸ்வரன் வரவேற்றார்.

குமரி நாட்டுச் சோழ மன்னன் வெங்கலராஜன் வரலாற்று ஆய்வு புத்தக நூலை பால. பிரஜாபதி அடிகளார் வெளியிட திரைப்பட இயக்குநர் நாஞ்சில் பி.சி.அன்பழகன், முன்னாள் எம்.பி. பி.சவுந்தரராஜன், சிவந்தி ஆதித்தனார் கல்லூரி தலைவர் சி.தர்மலிங்கம் உடையார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

விழாவில் கன்னியாகுமரி மாவட்டம், கோவில் விளை கடற்கரைப் பகுதியில் உள்ள வெங்கலராஜன் கோட்டை மற்றும் அதனைச் சார்ந்த பகுதியினை தொல்லியல் துறை கையகப்படுத்தி பாதுகாத்து அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு வெங்கலராஜன் வரலாற்றை மீட்டெடுக்க வேண்டும். அப்பகுதியில் மன்னர் வெங்கலராஜன் உருவச்சிலை அமைக்க வேண்டும். வெங்கலராஜன் வாழ்க்கை வரலாற்றை தமிழக பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். வெங்கலராஜன் கோட்டை சந்திப்பில் பயணிகள் நிழற்குடை அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவில், பா. தாமரை தினேஷ், வழக்கறிஞர் என்.பார்த்தசாரதி, சாமிதோப்பு ஊராட்சி முன்னாள் தலைவர் மதிவாணன், சமூக ஆர்வலர் சவுந்தரராஜன், எழுத்தாளர் குமரி ஆதவன், குமரி முத்தமிழ் மன்றத் தலைவர் முழங்குழி லாசர், தமிழ்நாடு கலை இலக்கியகழகசெயலர்முகிலை பாஹீ, கவிஞர் பாபு, எழுத்தாளர்மணிதணிகை குமார், வெங்கலராஜன் அறக்கட்டளை நிர்வாகிகள் ஏ.எம்.அரசு, எஸ்.ராஜன், பொன் டேவிட், ஏ.தினேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# சுசீந்திரம் அருகே கார் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற தனியார் நிறுவன அதிகாரி பரிதாப சாவு

சுசீந்திரம்.ஜீலை.27

நாகர்கோவில் ராமவர்மபுரம் வடக்கு சற்குணவீதியைசேர்ந்தவர் மோசஸ் வயது 53, இவர் அச்சன்குளத்தில் உள்ள மனோலயா மனநல காப்பகத்தில் நிர்வாக அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். சம்பவத்தன்று வேலைக்கு சென்று விட்டு மாலையில் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பி கொண்டிருந்தார்.

சுசீந்திரம் பைபாஸ் சாலையில் அவர் வந்த போது, பின்னால் வந்த கார் மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் மோசஸ் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். தலை மற்றும் கை, கால்களில் பலத்த காயம் அடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்து வமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சைஅளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பலனின்றி மோசஸ் பரிதாபமாக இறந்து போனார்.

இதுகுறித்து அவரது தாயார் வசந்தவதி வயது 78, சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள் பிரகாஷ், சப் இன்ஸ்பெக்டர் லிபி பால்ராஜ் ஆகியோர் வழக்கு செய்து விசாரணை நடத்தினர்.

விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த பாலப்பள்ளம் படுவூர் பகுதியை சேர்ந்த அருள் ஸ்டேன்லி ஜோஸ் வயது 54, மீது வழக்கு பதிவு செய்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்தாமரைகுளம் புனித பனிமய அன்னைஆலய பங்குக் குடும்பவிழா!

## இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது



தென்தாமரைகுளம், ஜூலை. 27

தென்தாமரைகுளம் புனித பனிமய அன்னை ஆலய பங்குக் குடும்ப விழா இன்று(திங்கள்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்கி அடுத்த மாதம் 5ந் தேதிவரை 10 நாட்கள் தொடர்ந்து நடக்கிறது. முதல் நாளான இன்று திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு செபமாலை, புகழ்மாலை, 6.45மணிக்கு திருக்கொடி ஏற்றம், திருப்பலி நடக்கிறது. இதற்கு கன்னியாகுமரி மறைவட்ட முதல்வர் அருட்பணி. பெலிக்ஸ் அலெக்சாண்டர் தலைமை தாங்குகிறார். கன்னியாகுமரி பங்குத் பணியாளர் மைக்கல் ஏஞ்சல் மறையுரை ஆற்றுகிறார். இரவு 8.30 மணிக்கு இன்னிசைகச்சேரி நடக்கிறது. தொடர்ந்து அடுத்த மாதம் 5ம் தேதி புதன்கிழமை வரை 10 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. விழாவில் தினமும் மாலை செபமாலை, புகழ்மாலை, திருப்பலி, மறையுரை,,இரவு கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

9ம் நாளான ஆகஸ்ட் 4ந் தேதி செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு செபமாலை, புகழ்மாலையும், 6:45 மணிக்கு சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறுகிறது .இதற்கு கோட்டாறு மறை மாவட்டச் செயலர் அருள்பணி. மரியகிளாட்சன்தலைமை தாங்குகிறார், திருச்சி தமிழக இளையோர் பணிக் குழு இயக்குனர் அருட்பணி. ஜெனிபர் எடிசன் மறையுரையாற்றுகிறார். உடன் மண்ணின் மைந்தர்கள் மற்றும் அருள் சகோதரிகள் ஜெபிக்கின்றனர்,இரவு 8.30 மணிக்கு அதிசய பனிமய அன்னையின் அலங்கார தேர்பவனி நடைபெறுகிறது

10ம் நாளான 5ந் தேதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு செபமாலை புகழ்மாலை,8 மணிக்கு திருவிழா திருப்பலி நடைபெறுகிறது. இதற்கு சென்னை, நம் வாழ்வு முதன்மை ஆசிரியர் அருள் முனைவர். ராஜசேகரன் தலைமை தாங்குகிறார். பெங்களூர் சட்டப்பணி குழு செயலர் அருள், முனைவர் கிறிஸ்து ராஜமணி மறையுரையாற்றுகிறார். பிற்பகல் 3மணிக்கு அதிசய பனிமய அன்னையின் அலங்கார தேர்பவனி நடைபெறுகிறது. மாலை 6.30 மணிக்கு திருக்கொடியிறக்கம், நற்கருணை ஆசீர், இரவு 7.30 மணிக்கு பங்கு மக்கள் வழங்கும் இன்னிசை விருந்து நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை பங்குதந்தை எல். எட்வர்ட் மற்றும் பங்குமக்கள், பங்கு அருள்பணிப் பேரவையினர். அருள்சகோதரிகள் செய்துவருகின்றனர்.

# மணக்குடியில் உலக மாங்குரோவ் தினம் கல்லூரி மாணவ,மாணவிகள் பங்கேற்பு




நாகர்கோவில், ஜூலை. 27

கன்னியாகுமரி மாவட்ட வன உயிரின காப்பாளர் அன்பு உத்தரவின் பேரில், கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் மற்றும் உதவி வன பாதுகாவலர் ஸ்ரீ வல்சன் அறிவுறுத்தலின்படி, மேலும் பூதப்பாண்டி வன சரகம் அலுவலர் அன்பலகன் வழிகாட்டுதலின் கீழ், அரல்வாய்மொழி வனவர் மணிகண்டன், கோவளம் வனக் காவலர் முத்துலட்சுமி மற்றும் களப்பணியாளர்களின் ஏற்பாடுகளுடன், உலக மாங்குரோவ் தினம் 2026 நேற்று மணக்குடி மாங்குரோவ் தளத்தில் அனுசரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாங்குரோவ் நடவு, மாணவர்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், மாங்குரோவ் வாழ்விட சுத்தம் செய்தல், மற்றும் மாணவர்களுக்கான கல்வி களப்பயணங்கள் ஆகியவை இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கிராம மாங்குரோவ் குழு தலைவர் ரீகன் மற்றும் உறுப்பினர்கள், சிலுவை வாஸ்தியன், ப்ரொவிஷன் என்ஜிஓ பிரதிநிதிகள், உள்ளூர் பஞ்சாயத்து பணியாளர்கள், மற்றும் நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை சுதாமதி (என்ஜிஓ) ஒருங்கிணைத்தார். மேலும் அனைத்து கள ஏற்பாடுகளும் பூதப்பாண்டி வன சரக களப்பணியாளர்களால் செய்யப்பட்டன.

# ஸ்பிக்நகர் மேல்நிலைப்பள்ளியில் 53வது பெற்றோர் தினவிழா

## மாநகராட்சி ஆணையர் எஸ்.பிரியங்கா பங்கேற்பு




தூத்துக்குடி ஜூலை. 27

தூத்துக்குடி ஸ்பிக்நகர் மேல்நிலைப்பள்ளியின் 53வது பெற்றோர் தின விழா பள்ளி வளாகத்தில் உள்ள இராசகோபாலன் கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் எஸ்.பிரியங்கா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். பள்ளித் தலைவர் பி. செந்தில்நாயகம், பள்ளிச் செயலாளர் டி.எஸ். பிரேம்சுந்தர், பள்ளித் தலைமையாசிரியர் எல். பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் பள்ளி நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன. தமிழரின் பண்பாட்டைப் பறைசாற்றும் பரதநாட்டியத்துடன் கதக் மற்றும் மோகினி ஆட்டம் இணைந்த நடனம் மற்றும் வரவேற்பு நடனம் அமைந்திருந்தது. 'சட்டத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தும் தமிழ் நாடகமும், 'கல்வியே உயர்ந்த செல்வம்' என்பதை உணர்த்தும் நடனமும் நடத்தப்பட்டன. பெற்றோரைக் பெருமைப்படுத்தும் நடனம், சமயோஜித புத்தியால் எச்சூழலையும் வெல்லலாம் என்பதை விளக்கிய ஆங்கில நாடகம் மற்றும் மின் விளக்குகளை உடலின் மீது சுற்றி மாணவர்கள் ஆடிய நடனம் ஆகியவை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன. இறுதியாக நன்றியுரையாற்றினார் , பின்னர் நாட்டுபண்ணுடன்விழாமுடிவடைந்தது



## கிருஷ்ணகிரியில்

# உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பா வெங்கட்ரமணன் அதிரடி ஆய்வு

கிருஷ்ணகிரி ஜூலை 27:

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், மாவட்ட ஆட்சித்தலைவர்தினேஷ் குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் பாண்டியன், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா மற்றும் அரசு துறை அலுவலர்களுடன் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் சமூக நீதி விடுதிகள் , கூட்டுறவு நியாய விலை கடைகளை நேரில் பார்வையிட்டு உணவுத்துறை மூலம் வழங்கப்படும் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்தார். கிருஷ்ணகிரி புதிய வீட்டு வசதி வாரியத்தில் உள்ள சிறு கூட்டுறவு சிறப்புங்காடியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அரிசி, பருப்பு, சர்க்கரை, எண்ணெய், உள்ளிட்ட பொருள்களின் இருப்பு மற்றும் தரம் உள்ளிட்டவைகளை கேட்டறிந்தார். பின்னர் அந்தப் பகுதி பொதுமக்களிடம் நிறை குறைகளை கேட்டு அதை உடனடியாக சரி செய்திட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்த ஆய்வின் போது கிருஷ்ணகிரி மாவட்ட பொதுவிநியோகத் திட்ட துணைப்பதிவாளர் சிவகுருநாதன், கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.சரவணன், கூட்டுறவு சார்பதிவாளர் சாந்தா, விற்பனையாளர்கள் சசிகுமார் உள்ளிட்டவர்கள் உடன் இருந்தனர்.



# கோவை மாவட்ட ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் பேரியக்கம் சார்பில் ஆலோசனை கூட்டம்

கோவை ஜூலை:27

கோவை மாவட்டம் குறிச்சி பகுதியில் உள்ள அருள்மிகு சேரமான் பெருமாள் நாயனார் வழிபாட்டு மண்டபத்தில் வ உ சிதம்பரம் பிள்ளையின் 155 வது பிறந்தநாள் விழா சிறப்பாக நடத்துவது குறித்து ஆலோசனை கூட்டம் கோவை மாவட்ட ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் பேரியக்கம் சார்பாக நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தீர்மானங்கலான, ஆதித்யா தொலைக்காட்சி நிகழ்ச்சி வ உ சிதம்பரம் பிள்ளை அவர்களை இழிவாக பேசிய நபர்களை கண்டித்தும் உடனடியாக ஆதித்யா தொலைக்காட்சி நிறுவனம் ஓரிரு நாட்களில் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லை என்றால் ஆதித்யா தொலைக்காட்சி தலைமை அலுவலகம் முற்றுகை போராட்டம் நடத்தப்படும்,42 உட்பிரிவுகளை ஒருங்கிணைத்து வேளாளர் இனம் என்று அரசாணை வெளியிட வேண்டும்.செப்டம்பர் 5 ஆம் தேதியை வழக்கறிஞர் தினமாக அறிவிக்க வேண்டும்போன்ற தீர்மா னங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

# கன்னியாகுமரி மாயம்மா கோவிலில் வெள்ளி பொருட்கள் கொள்ளை; திருடன் கைது




கன்னியாகுமரி, ஜூலை.27

கன்னியாகுமரி கலங்கரை விளக்கம் எதிரே உள்ள மாயம்மா கோயில் உள்ளது.இங்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றனர்.இந்த கோயில் பூஜாரி முத்துகிருஷ்ணன் பூஜை முடிந்து கோயில் கதவை பூட்டி சென்றார். மறுநாள் முத்துகிருஷ்ணன் கோயிலை திறந்த போது கோவிலில் இருந்த பொருட்கள் சிதறி கிடந்தன. மேலும் மரப்பெட்டியில் இருந்த வெள்ளி பூஜை பொருட்கள், நான்கு வெள்ளிக்கவசம், 100க்கும் மேற்பட்ட வெள்ளி நாணயங்கள் ,வெள்ளி கவசம் பொருத்தப்பட்ட வலம்புரி சங்கு, வெள்ளி கொலுசுகள் என மொத்தம் ஒன்றேகால் கிலோ எடையுள்ள வெள்ளி பொருட்கள் திருடப்பட்டுள்ளது. இது குறித்து முத்துகிருஷ்ணன் கன்னியாகுமரி போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் கன்னியாகுமரி டிஎஸ்பி பிரகாஷ் மேற்பார்வையில் சப். இன்ஸ்பக்டர்வினிஷ்பாபு தலைமையிலான போலீசார் கொள்ளையனை தேடும் பணியில் ஈடுபட்டனர். அதில் கொள்ளை அடித்த பொருட்களுடன் கொள்ளையன் கன்னியாகுமரி பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து ஆட்டோ மூலம் மார்த்தாண்டம் சென்றுள்ளான். அங்கு ஒரு தனியார் விடுதியில் 2 நாட்கள் தங்கி இருந்துள்ளான். பின்னர் நேற்று குழித்துறை ரயில் நிலையம் சென்ற கொள்ளையனை போலீசார் சுற்றி வளைத்து பிடித்தனர். பின்னர் கன்னியாகுமரி காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்த போது மேற்குவங்கத்தைச் சேர்ந்த ஆசிஸ் சர்க்கார் (29) என்பது தெரிய வந்தது. இதனையடுத்து போலீசார் கோவிலில் கொள்ளையடித்த பொருட்களை பறிமுதல் செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# குமரி போலீஸ்காரரிடம் மாற்று சிறுநீரகம் தருவதாக ரூ.12 லட்சம் மோசடி ; நர்ஸ் உட்பட 3 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூலை. 27

நாகர்கோவிலில் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட போலீஸ்காரருக்கு மாற்று சிறுநீரகம் பெற்று தருவதாக ரூ.12 லட்சம் பெற்றுக் கொண்டு ஏமாற்றியதாக நர்ஸ் உட்பட 3 பேரிடம் விசாரிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் வட்டவளை பகுதியைச் சேர்ந்த 29 வயதான போலீஸ்காரர் தற்போது மணிமுத்தாறு பட்டாலியன் பிரிவில் பணியில் இருக்கிறார். இவருக்கு சிறுநீரக பிரச்சனை இருந்து வந்தது. மருத்துவ பரிசோதனையில் மாற்று சிறுநீரகம் பொருத்த வேண்டும் என டாக்டர்கள் தெரிவித்தனர். இதற்காக முயற்சியில் போலீஸ்காரர் மற்றும் அவரது குடும்பத்தினர் இறங்கி இருந்தனர்.

இந்த நிலையில் நாகர்கோவிலில் உள்ள ஒரு பிரபல தனியார் மருத்துவமனையில் நர்சாக பணியாற்றும் பாக்கியபாய் என்பவர் மூலம் ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியை சேர்ந்த ரீகன் என்பவரின் தொடர்பு கிடைத்தது. அப்போது ரீகன் மாற்று சிறுநீரகம் பெற உதவி செய்வதாக உறுதி கூறி போலீஸ்காரிடமிருந்து ரூ. 12 லட்சம் பெற்றுள்ளார்.

பணத்தைப் பெற்று பல மாதங்கள் ஆன பின்னரும் இன்னும் சிறுநீரகம் பெற்றுக் கொடுக்கவில்லை. போலீஸ்காரர் உடல் நிலையும் பாதிப்புக்கு உள்ளாகி வந்துள்ளது. இது குறித்து கேட்டபோது முறையான பதில் தெரிவிக்கவில்லை.

இது தொடர்பாக தற்போது பாதிக்கப்பட்ட போலீஸ்காரர் கோட்டாறு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின் பேரில் ரீகன் மற்றும் மதுரை பெருமாள் பகுதியை சேர்ந்த முகமது பாசில், நாகர்கோவிலை சேர்ந்த பாக்கிய பாய் ஆகிய 3 பேர் மீது கோட்டாறு போலீசார் மோசடி உள்ள பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மேலும் இது தொடர்பாக விசாரணை நடத்த கோட்டாறு இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையில் தனிப்படை போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர். இதை அடுத்த 3 பேரையும் விசாரணைக்காக போலீஸ் நிலையம் அழைத்துள்ளனர். ஆனால் அவர்கள்தலைமறைவாகி உள்ளதாக கூறப்படுகிறது. விசாரணை நடத்தினால் தான் இந்த சம்பவத்தின் பின்னணி தெரியவரும் என போலீசார் கூறியுள்ளனர்.

# மணப்பாறை காங்கிரஸ் கட்சியினர் மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம்.!

மணப்பாறை, ஜூலை:27

நீட் வினாத்தாள் கசிந்ததற்கு எதிராக நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கே.ஆர்.ஆர்.ராஜலிங்கம் ஆகியோர் அறிவுத்தலின்படி மணப்பாறையில் நகரத்தலைவர்களும் வட்டாரத் தலைவர்களும் இணைந்து மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் நடத்தினர்.

இதில் கட்சி சார்பில் நகரத் தலைவர்வட்டார தலைவர் சித்தானதம் ஆர்.சிவசண்முகம்,சத்தியசீலன், செல்வம்,ராதாகிருஷ்ணன்,குழந்தை,தமிழரசன்,பொன்னுச்சாமி,மாவட்டநிர்வாகிகள்குமார்,ஆரோக்கியம்,பழனிச்சாமி,வீரபாண்டியன்,மணிவேல்,கலைப்பிரிவு வழக்கறிஞர் கலைராஜ்,சிறுபான்மை பிரிவு நஜீம்,மாணவர் காங்கிரஸ் ராம்பிரகாஷ்,தொழிற்சங்க நிர்வாகி சிங்காரவேல்,துவரங்குறிச்சி குருநாதன்,மகளிர் காங்கிரஸ் சரோஜா,மேரி,ராஜம்,மல்லிகா, செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# எஸ்.ஆர். எம் பல்கலை கழகம் 880 மாணவர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டு சான்றிதழ்கள் வழங்கும் விழா




சென்னை, ஜூலை, 27, எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம், 880 மாணவ விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டு (Sports Quota) சான்றிதழ்களை வழங்கியும் உயர்தர விளையாட்டு பயிற்சியையும் கல்விசார் முன்னேற்றத்தையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள எஸ்.ஆர்.எம். விளையாட்டு விடுதி திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பொதுப்பணித் துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் &ஆதவ் அர்ஜுனா விளையாட்டு ஒதுக்கீட்டு சான்றிதழ்களை வழங்கி, எஸ்.ஆர். எம். விளையாட்டு விடுதியை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் எஸ்.ஆர். எம். பல்கலைக்கழகத்தின் நிறுவன வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர், நிர்வாக இணைவேந்தர் ரவி பச்சமுத்து, கல்வி இணைவேந்தர் பி. சத்யநாராயணன், அறங்காவலர் மற்றும் எஸ். பாலாஜி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். தியாகராஜன் பி. விஜயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் எஸ்.ஆர். எம். பல்கலைக்கழகத்தின் நிறுவன வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் கூறியதாவது: "எங்களது 880 மாணவர்கள் இன்று விளையாட்டு ஒதுக்கீட்டு சான்றிதழ்களை பெறுவது, ஒட்டுமொத்த எஸ்.ஆர்.எம். குடும்பத்திற்கும் மிகுந்த பெருமைக்குரிய தருணமாகும். விளையாட்டிலும் வாழ்க்கையிலும் சிறந்து விளங்குவதற்காக, மாணவர்கள் ஆதவ் அர்ஜுனா அறிவைப் பெறும் ஆர்வம், உறுதியான மனப்பாங்கு மற்றும் விடாமுயற்சியிலிருந்து ஊக்கமடைவார்கள் என்று நான் நம்புகிறேன்." என்று தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தனது உரையில், "இளம் வயதிலிருந்தே விளையாட்டுத் திறமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் எஸ்.ஆர். எம். பல்கலைக்கழகம் வழங்கி வரும் பங்களிப்பையும் பாராட்டினார். 8 முதல் 18 வயதுக்குள் உள்ள இளம்விளையாட்டு வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு வளர்த்து, மாணவர்கள் வெற்றி பெற தேவையான வாய்ப்புகளையும் ஆதரவையும் வழங்குவதே மாநில அரசின் நோக்கமாகும். குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த திறமையான விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்கி, உயர் கல்வியையும் விளையாட்டையும் ஒருசேர தொடரும் வாய்ப்பை எஸ்.ஆர். எம். பல்கலைக்கழகம் மற்ற கல்வி நிறுவனங்களுக்கு திகழ்கிறது. இதுபோன்ற முயற்சிகள் இந்திய விளையாட்டுத் துறையை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஆரோக்கியமான, ஒழுக்கமான மற்றும் போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கவும் பெரிதும் உதவுகின்றன." என்று பேசினார்

# கோவை கோனியம்மன் கோயில் உண்டியல் சம்பவம் கைவைத்த ஊழியர்கள் உட்பட 8 பேர் சஸ்பென்ட்.

கைவைத்த ஊழியர்கள் உட்பட 8 பேர் சஸ்பென்ட்.

கோவை, ஜூலை:27 கோவை கோனியம்மன் கோயிலில் உண்டியல் பணத்தை பூசாரி உட்பட ஊழியர்கள் திருடிய விவகாரத்தில் உதவி ஆணையர் உட்பட 8 பேர் பணிநிடை நீக்கம் செய்து அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள்ளார்.

கோவையின் காவல் தெய்வமான கோனியம்மன் கோயிலில் ஒன்பது இடங்களில் நிரந்தர உண்டியல்களும், 7 இடங்களில் தற்காலிக உண்டியல்கள் என மொத்தம் 16 இடங்களில் உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த 15 ம் தேதி இந்து சமய அறநிலைய துறை அதிகாரிகள் முன்னிலையில் உண்டியல் பணம் எண்ணப்பட்டது.

அப்போது ஒரு உண்டியலை மட்டும் ஊழியர்கள் தனியாக எடுத்து வைத்துள்ளனர். இதை பார்த்த பக்தர் ஒருவர் சென்னையில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு எழுத்துப்பூர்வமாக புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் இந்த புகார் குறித்து விசாரணை மேற்கொண்டனர்

விசாரணையில் ஒரு உண்டியலை எண்ணாமல் அதில் இருந்த 30 ஆயிரம் பணத்தை கோவிலில் பணிபுரியும் பால சுப்பிரமணியன், சரவணன், பிரதீப் குமார், கோயில் பூசாரி கிருஷ்ணராஜ் ஆகிய 4 பேர் கையாடல் செய்தது உறுதியானது. இதனையடுத்து இந்து சமய அறநிலையதுறை அதிகாரிகள் புகாரின் பேரின் பூசாரி உட்பட 4 பேரையும் உக்கடம் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், கோவில் உண்டியல் திருட்டில் ஈடுபட்ட பால சுப்பிரமணியன், சரவணன், பிரதீப்குமார், கிருஷ்ணராஜ் ஆகிய 4 பேரையும், பணம் திருடப்பட்டதை கண்டறியாமல் அஜாக்கிரதையாக செயல்பட்ட இந்து சமய அறநிலைய துறை உதவி ஆணையர் உஷா நந்தினி, கோவில் செயல் அலுவலர் குமார்,

சரக ஆய்வாளர்கள் ராம்குமார், உதயகுமார் உள்ளிட்ட 8 பேரையும் பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார். அமைச்சரின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பக்தர்கள் மத்தியில் வரவேற்பு எழுந்துள்ளது.

# தூத்துக்குடி தூய பனிமய மாதாவின் 444வது திருவிழா !

## கொடியேற்றத்துடன் கோலாகலத் தொடக்கம்!!



உலகப் புகழ்பெற்ற தூத்துக்குடி தூய பனிமய மாதா பேராலயத்தின் 444வது ஆண்டுத் திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. தூத்துக்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற தூய பனிமய மாதா பேராலயத்தில் ஆண்டுதோறும் ஜூலை 26ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 5ஆம் தேதி வரை 11 நாட்கள் பெருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்தஆண்டின் 444வது பெருவிழாவை முன்னிட்டு நேற்று காலை 5 மணிக்கு முதலாம் திருப்பலியும், 6 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் ஸ்டீபன் தலைமையில், பேராலயப் பங்குத்தந்தை ஸ்டார்லின் முன்னிலையில் பனிமய மாதாவின் உருவம் பொறிக்கப்பட்ட திருக்கொடி எடுத்து வரப்பட்டது.

பேராலய வளாகத்தில் உள்ள கொடிமரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்களின் ஜெபத்துடனும், கரவொலியுடனும் திருக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அப்போது உலக அமைதியை வலியுறுத்தும் வகையில் பக்தர்கள் வெண்புறாக்களைப் பறக்கவிட்டனர். கொடியேற்றத்திற்கு முன்னதாகப் பக்தர்கள் நேர்த்திக்கடனாகக் கொண்டு வந்த பால் மற்றும் பழங்கள் கொடிமரத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அனைவருக்கும் வழங்கப்பட்டன. கொடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பனிமய மாதாவுக்குப் பொன் மகுடம் அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மனிதவள மேலாண்மை மற்றும் முன்னாள் படைவீரர் நல துறை அமைச்சர் த.சரத்குமார், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத், மாவட்ட ஆட்சியர் விஷா மகாஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குப்தா உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களும், ஆயிரக்கணக்கான பக்தர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஆகஸ்ட் 5ஆம் தேதி வரை 11 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் நாள்தோறும் பல்வேறு மொழிகளில் சிறப்புத் திருப்பலிகள், பிரார்த்தனைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. விழாவின் நிகழ்ச்சியான தேர் பவனி ஆகஸ்ட் 5ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி ஆகஸ்ட் 5அன்றுதூத்துக்குடி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விழாநாட்களை முன்னி ட்டுத் தூத்துக்குடி நகரமே விழா க்கோலம் பூண்டு ள்ளதுடன், பலத்த காவல் துறை பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

# மலையோர கிராமம் சிற்றாறு பகுதியில் ரேஷன் கடைக்குள் நள்ளிரவில் புகுந்த காட்டு யானை



மார்த்தாண்டம், ஜூலை. 27 கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலையோர கிராமங்களில் கடந்த சில மாதங்களாக யானைகள் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. குறிப்பாகவட்டப்பாறை, மருதம்பாறை, குற்றிஆறு, மோதிரமலை உள்ளிட்ட மலையோர பகுதிகளில் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து யானைகள் வீடுகளை சேதப்படுத்தி மக்களை அச்சுறுத்தி வருகிறது. மேலும் அந்த பகுதியில் உள்ள ரப்பர் தோட்டங்களில் உள்ள பண பயிர்களை நாசம் செய்து வருகிறது.

யானைகளின் நடமாட்டம் தொடர்ந்து அதிகரித்து காணப்பட்டதால் கிராம மக்கள் அச்சத்தில் இருந்து வருகின்றனர். இதுதொடர்பாகமாவட்ட வன அலுவலர் அன்பு தலைமையில் வனத் துறை அதிகாரிகள் குடியிருப்புக்குள் யானைகள் வருவதை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இரவு நேரங்களில் யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டதோடு, பொதுமக்கள் வெளியே வரவேண்டாம் என்றும் வனத்துறை அறிவுறுத்தி உள்ளது.

ஆனால் தற்போது பலாப்பழ சீசன் என்பதால் குடியிருப்பு பகுதிகளில் உள்ள மரங்களில் பலாப்பழங்களை சாப்பிடுவதற்காக யானைகள் அதிக அளவில் வந்து செல்வதாக கூறப்படுகிறது. 2 நாட்களுக்கு முன்பு குற்றியாறு, மோதிரமலை பகுதிகளில் கூட்டம் கூட்டமாக யானைகள் உலா வந்தன. அவற்றை வனப்பகுதிக்குள் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் ஒரு யானை அட்டகாசத்தில் ஈடுபட்டது.

சிற்றாறு சிலோன் காலனி பகுதியில் உள்ள ரேஷன் கடைக்குள் புகுந்த யானை, ரேஷன் கடை கதவு உடைத்து அங்கிருந்த அரிசி பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை சாப்பிட்டுள்ளது. மேலும் சில பொருட்களை ரேஷன் கடையில் இருந்து எடுத்து வெளியே வீசி எறிந்துள்ளது.

இதற்கிடையில் யானைகளின் அட்டகாசத்தால் கண்விழித்த பொது மக்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று ரேஷன் கடையை பார்வையிட்டு, தொடர்ந்து அந்த பகுதியில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில்,

யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளனர்.



## கிருஷ்ணகிரியில்

# வீ தி லீடர்ஸ் சார்பில் போதையில்லா, போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.நரசிம்மன் துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி ஜூலை 27: வி தி லீடர்ஸ் என்ற இயக்கத்தை பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை அவர்களால் துவங்கப்பட்டது. கிருஷ்ணகிரி விதி லீடர்ஸ் இயக்கத்தின் சார்பில் போதை இல்லா கிருஷ்ணகிரி என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. கிருஷ்ணகிரியில் நடைபெற்ற இந்த பேரணிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.நரசிம்மன் தலைமை தாங்கினார். இந்த வேலையில்லா கிருஷ்ணகிரி விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட அனைவருக்கும் டி ஷர்ட் மற்றும் தொப்பிகள் வழங்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு பேரணிக்கு இயக்கத்தை சேர்ந்த கிருஷ்ணகிரி சாந்தி, மன்னன்சிவா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி பழைய பேட்டை காந்திசிலை முன்பு இருந்து துவங்கப்பட்ட இந்த பேரணியானது பாப்பாரப் பட்டி வழியாக கார்நேஷன்திடல்வந்தடைந்தது. இந்தப் பேரணியில் கலந்து கொண்டோர் போதையில்லா இந்தியா பலமான இந்தியா, நண்பன் என்று போதை நம் பாதே, போதைக்கு மரணம் வாழ்வுக்கு வரவேற்பு, போதை உடைத்து வீடுகள் ஆயிரம், புத்துயிர் பெரு போதையை நிராகரி, தமிழகத்தில் மாறுவோம் மாற்றுவோம், மாற்றம் உன்னிடமிருந்து தொடங்கட்டும், உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதார்த் தங்களை குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்கள் கையில் ஏந்தியவாறு இந்தப் பேரணியின் கலந்து கொண்டனர்.

இந்த போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியின் முக்கிய அம்சமாக மது, புகையிலை, கஞ்சா, குட்கா, உள்ளிட்ட எந்த ஒரு போதைப் பொருளையும் என் வாழ்நாளில் ஒரு போதும் பயன்படுத்த மாட்டேன் என்றும், என் உடல் நலமும் மன நலமும் என்னிடம் உள்ள மிகப்பெரிய சொத்து அவற்றை போதைப் பழக்கத்தால் ஒருபோதும் இழக்க மாட்டேன் என்றும், போதை பொருள் விற்பனை, கடத்தல், விநியோகம், அல்லது அவற்றுக்கு உடந்தையாக இருத்தல் போன்ற எந்த செயலிலும் ஈடுபட மாட்டேன் என்றும், நண்பர்களின் வற்புறுத்தலுக்கும் ஆர்வக்கோளாருக்கும் அடிபணியாமல் எனக்கு வேண்டாம் என தைரியமாக மறுத்து சொல்வேன் என்றும், என் குடும்பத்தினர் நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தினரிடையே போதை பழக்கத்தின் தீமைகள் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், வீ தி லீடர்ஸ் இயக்கத்துடன் இணைந்து போதையில்லா ஆரோக்கியமான வலிமையான சமுதாயத்தை உருவாக்க தொடர்ந்து பாடுபடுவேன் என உள்ளிட்ட 10 போதைப்பொருள் ஒழிப்பு உறுதி மொழியை பொதுமக்களிடம் எடுத்துக் கூறியும், துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மேலும் இந்தப் பேரணியின் போது பொதுமக்களிடம் உறுதிமொழி ஏற்பவரின் விவரங்களை படிவமாக பெற்றுக்கொண்டனர். வீ தி லீடர்ஸ் இயக்கத்தின் சார்பில் போதையில்லா கிருஷ்ணகிரி என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த மாபெரும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் இயக்கத்தை சேர்ந்த மோதிலால், ஹரி பிரகாஷ், உள்ளிட்ட கிருஷ்ணகிரி பகுதியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# பல் சமய நட்புறவு கழகம்தமிழக வெற்றி கழகம் இணைந்து நடைபெற்ற மத நல்லிணக்க மருத்துவ முகாம்!!!



பல்லடம் ஜூலை,27 அறிவொளி நகரில் உள்ள சமுதாய கூடத்தில் தமிழக வெற்றி கழகத்தின் வடகிழக்கு ஒன்றியம் பல் சமய நட்புறவு கழகம் பல்லடம் ஒன்றியம் சார்பில் நடைபெற்ற மத நல்லிணக்க மருத்துவ முகாமில் பொது மக்களுக்கு கண் சிகிச்சை, ஹோமியோபதி மருத்துவம், மூன்று நாட்கள் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. டாக்டர் ஷாக்கீரா ஹோமியோ, வர்மா மருத்துவ நிபுணர், மாடர்ன் ஆப்டிகல்ஸ் இணைந்து வழங்கும் மத நல்லிணக்க மருத்துவ முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சியை த.வெ.க. மேற்கு மாவட்ட செயலாளர் ஜி .கே .சங்கர், துவக்கி வைத்தார்.பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் கே. ராம்குமார்வாழ்த்துரை வழங்கினார். பி .என். கே. மாவட்ட பொருளாளர் ஹக்கீம் தலைமையில் த.வெ.க. வடகிழக்கு ஒன்றிய செயலாளர் அபூபக்கர் சித்திக், உபைது ரகுமான், முன்னிலையில் சிறப்பு அழைப்பாளர்களாக மஜக மாவட்ட செயலாளர் பிரண்ட்ஹக்கீம், ஐக்கிய ஜமாத் கெளரவ ஆலோசகர் முபாரக் அலி, தமிழ் மாநிலமக்கள்முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்து பாய், பல சமையல் குறிப்பு கழகத்தின் தலைவர் ஷாஜகான், பி .என்.கே நிறுவன தலைவர் ஷாஜகான் தலைமை கழக பேச்சாளர் கருப்பசாமி பாண்டி, மற்றும் பல் சமய நட்புறவு கழகம் நிர்வாகிகள். த.வெ.க.வடகிழக்குஒன்றியநிர்வாகிகள் பிரபு (எ) கார்த்திக் ,விஜயகுமார் ,அஷ்ரப் அலி, அறிவகம் ,அஜித், அனிஸ் பாபு, பாண்டி, முருகேஷ், மூர்த்தி. மகளிரணி நிர்வாகிகள் ஒன்றிய குழு உறுப்பினர் ரம்யா, லாயில, ரேஷ்மா, ரஃவி, முத்துலட்சுமி, நிகழ்ச்சியின் இறுதியில் ஒன்றிய மாணவர் அணி தலைவர் ஆஷிக் நன்றியுரை கூறினார்..

# பாலக்கோடு அருகே போலீசுக்கு தெரியாமல் நிலத்தகராவில் இறந்தவரின் உடலை அடக்கம் செய்ய முயற்சி!

## பிரேதத்தை கைப்பற்றிய காவல்துறையினாரல் பரபரப்பு!!




. தருமபுரி ஜூலை 27 தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சாவடி தெருவைச் சேர்ந்தவர் கணேசன் (வயது61). இவருக்கு கடத்தூர் பகுதியில் 3½ ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தை கடந்த வாரம் விற்பனை செய்ததைத் தொடர்ந்து, நேற்று நிலத்தை அளவீடு செய்வதற்காக சென்றுள்ளார். அப்போது பக்கத்து நில உரிமையாளருடன் ஏற்பட்ட தகராறில் கணேசன் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதில் அவருக்கு மூச்சுத்திணறல் மற்றும் வலிப்பு ஏற்பட்டதால், உடனடியாக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலத்திற்கு கொண்டு செல்லும் போது வழியிலேயே உயிரிழந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது, தன்னை தாக்கியவர்கள் குறித்து கணேசன் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்திருந்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அவரது உடலுக்கு பிரேதப் பரிசோதனை அவசியம் என போலீசார் கருதிய நிலையில், உறவினர்கள் போலீசுக்கு தகவல் தெரிவிக்காமல் உடலை அடக்கம் செய்ய முயன்றதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து, கடத்தூர் காவல்துறையினர் பாலக்கோட்டில் உள்ள வீட்டிற்கு விரைந்து சென்று, கணேசனின் உடலை அடக்கம் செய்வதற்கு முன் தடுத்து நிறுத்தி உடலை கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முழு அர்ப்பணிப்புடன் புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்.!

## மத்திய புதிய கல்வி அமைச்சர் பிரகலாத் ஜோஷி பெருமிதம்

புது டெல்லி, ஜூலை:27 பிரதமரின் வழிகாட்டுதலின்படி, இந்தபொறுப்பை முழு அர்ப்பணிப்புடன் ஏற்றுக்கொள்வதாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மத்திய கல்வி அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பிரதமர் மோடி எனக்கு ஒரு புதிய பொறுப்பை வழங்கியுள்ளார். இந்த பொறுப்பை நான் கடமை உணர்வுடனும், பணிவுடனும் ஏற்றுக் கொள்கிறேன்.

பிரதமர் மோடியின் கடந்த 12 ஆண்டுகால ஆட்சியில் பல வரலாற்று சிறப்புமிக்க சாதனைகள் செய்யப்பட்டுள்ளன. அதிலும் கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளில், தர்மேந்திர பிரதான் தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்தியதுடன், பல முக்கிய முன்னெடுப்புகளையும் செய்துள்ளார்.

புதிய கல்விக் கொள்கையில் நாடு பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பிரதமரின் வழிகாட்டுதலின் படி, முழுத்திறனையும் வெளிப்படுத்தி அர்ப்பணிப்புடன் எனது பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்வேன் என உறுதியளித்தார்.

முன்னதாக, நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்திற்கு பொறுப்பேற்று மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று கரப்பான்பூச்சி ஜனதாகட்சியை சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினர். ஒரு மாதத்திற்கு மேலாக நடந்த இப்போராட்டம், ஜூலை 20ம் தேதி தீவிரமடைந்தது.

மேலும், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மீது டெல்லி காவல் துறையினர் கொடூரமான முறையில் தடியடி நடத்தினர். அதன் எதிரொலியாக, நாடு முழுவதும் டெல்லியில் நடந்த போராட்டத்திற்கு ஆதரவு குவிந்தது.

அதையடுத்து, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவரது பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்தார்.அவரது ராஜிநாமாகடிதத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவும் ஏற்றுக்கொண்ட நிலையில், பிரதமர் நரேந்திர மோடி பரிந்துரையின் படி, புதிய கல்வி அமைச்சராக மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சராக உள்ள பிரகலாத் ஜோஷிக்கு கல்வித் துறை அமைச்சகம் என்ற கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் சௌரவ் தாஸ், "கல்வி அமைச்சராக பொறுப்பேற்பவர்கள், தேசத்தை இளைஞர்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களது கோரிக்கைகள் இளைஞர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த இயக்கமும் நாடு முழுவதும் ஆதரவை பெற்றது. புதிய கல்வி அமைச்சரை மிக விரைவில் சந்திக்க விரும்புகிறோம். ஒரு மாதத்திற்குள் எங்களை சந்திப்பதாக அரசு உறுதியளித்துள்ளது. என்ன நடக்கிறது என பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.